சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

**முன்னிலை: திரு.P.S. ரஸ்கின் ராஜ், B.A., L.L.B.,**

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் நாள் வியாழக்கிழமை

*அசல் வழக்கு எண். 23/2025*

**(TNMD2400000492025)**

கனரா வங்கி,
உசிலம்பட்டி கிளை,
அதன் முதன்மை மேலாளர் மூலமாக ..... வாதி

/ எதிர் /

சின்னச்சாமி ..... பிரதிவாதி

இந்த வழக்கு இந்நீதிமன்றம் முன்பு 16.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S.கணபதி அவர்களும், பிரதிவாதி தரப்பில் அழைப்பாணையை சார்வு செய்தும் நீதிமன்றத்தில் முன்னிலையாகாத காரணத்தினால் அவர் தோன்றாத்தரப்பினராகக் கருதப்பட்டு வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியம், வாதங்கள் பரிசீலிக்கப்பட்டு இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் ஒருதலைபட்ச…

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது பிராது தொகையான ரூ.2,92,050/-ஐ வாதிக்கு, பிரதிவாதி செலுத்தக்கோரியும் மற்றும் வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை செலுத்தி முடிக்கும் தேதி வரை 13.5%

வட்டியுடன் செலுத்தக் கோரியும், செலவுத் தொகைக்கும் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.

1**. வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு :**

பிரதிவாதி, வாதி வங்கியிடம் 20.02.2012 அன்று ரூ.90,000/- கடன் கோரி விண்ணப்பித்தார். அக்கடனை ஆண்டுக்கு 13.5% வட்டியுடன் சேர்த்து 60 மாதத் தவணைகளில் கூடும் வட்டியையும் சேர்த்து திரும்ப செலுத்தவும் ஒப்புக்கொண்டார். அக்கடனுக்கு ஆதரவாக பிரதிவாதி 20.02.2012 அன்று வாதி வங்கிக்கு கொதுவை ஒப்பந்தம் ஒன்றை எழுதிக்கொடுத்தார். பிரதிவாதி பல்வேறு தேதிகளில் உயிரூட்டு கடிதங்கள் எழுதிக்கொடுத்துள்ளார். அசலையும், வட்டியையும் செலுத்தவில்லை என்பதால் வாதி அசல் தொகையையும், அதற்குண்டான வட்டியையும் வசூல் செய்ய இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

2. பிரதிவாதி நீதிமன்ற அழைப்பாணையை தெரிந்து கொண்டு இவ்வழக்கில் முன்னிலையாகாததால் அவர் தோன்றாத் தரப்பினராக உத்தரவு செய்யப்பட்டுள்ளார். வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வ.சா.ஆ.1 முதல் வ.சா.ஆ.9 சான்றவாணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

3. வாதி கேட்கும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதை பரிசீலிக்கும் போது வாதி தன்னுடைய வழக்கினை மெய்ப்பிப்பதற்காக 20.02.2012ம் தேதிய பிரதிவாதி, வாதி வங்கிக்கு

எழுதிக்கொடுத்த கடன் விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 20.02.2012ம் தேதிய கடன் வழங்கல் கடிதம் வா.சா.ஆ.2 ஆகவும், 20.02.2012ம் தேதிய பிரதிவாதி, வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கொதுவை ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.3 ஆகவும், 20.02.2012ம் தேதிய ஆவணங்கள் நிறைவேற்றுதல் கடிதம் அசல் வா.சா.ஆ.4 ஆகவும், 19.11.2014ம் தேதிய கடன் உயிரூட்டு கடிதம் அசல் வா.சா.ஆ.5 ஆகவும், 02.01.2017ம் தேதிய கடன் உயிரூட்டு கடிதம் அசல் வா.சா.ஆ.6 ஆகவும், 30.12.2019ம் தேதிய கடன் உயிரூட்டு கடிதம் அசல் வா.சா.ஆ.7 ஆகவும், 25.12.2022ம் தேதிய கடன் உயிரூட்டு கடிதம் அசல் வா.சா.ஆ.8 ஆகவும், 10.01.2025 பிரதிவாதியின் கடன் கணக்குப்பட்டியல் அலுவலக நகல் வா.சா.ஆ.9 ஆகவும் தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகமல் இருந்து விட்டார். எனவே அவர் தோன்றாத்தரப்பினராக உத்தரவு செய்யப்பட்டுள்ளார். பிரதிவாதி தோன்றாத் தரப்பினராக இருந்ததால் வாதியின் வழக்கு விபரங்களை பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே பிரதிவாதிக்கு எதிரான இந்த வழக்கு வாதி தரப்பில் நிரூபிக்கப் பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. வாதியிடம் வாங்கிய கடனை பிரதிவாதி திருப்பி செலுத்தக் கடமைப்பட்டவர். எனவே வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு வாதிக்கு, பிரதிவாதி பிராது தொகை ரூ.2,92,050/-ஐ செலுத்த வேண்டும் என்றும், மேற்படி அசல் தொகை ரூ.90,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த தேதி முதல் தொகை செலுத்தி முடிக்கும் தேதி வரை 13.5% ஆண்டு வட்டியுடன் செலுத்த வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் மேற்கொண்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 26-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.26 16:16:33 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

<u>**வாதி தரப்பு சாட்சி :**</u>

வா.சா.1 ஆல்பின் ராஜ்

<u>**வாதி தரப்பு சான்றாவணங்கள் :**</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 20.02.2012 | பிரதிவாதி, வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் விண்ணப்பம் அசல் |
| வா.சா.ஆ.2 | 20.02.2012 | கடன் வழங்கல் கடிதம் அசல் |
| வா.சா.ஆ.3 | 20.02.2012 | பிரதிவாதி, வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கொதுவை ஒப்பந்தம் அசல் |
| வா.சா.ஆ.4 | 20.02.2012 | ஆவணங்கள் நிறைவேற்றுதல் கடிதம் அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.5 | 19.11.2014 | கடன் உயிருட்டு கடிதம் அசல் |
| வா.சா.ஆ.6 | 02.01.2017 | கடன் உயிருட்டு கடிதம் அசல் |
| வா.சா.ஆ.7 | 30.12.2019 | கடன் உயிருட்டு கடிதம் அசல் |
| வா.சா.ஆ.8 | 25.12.2022 | கடன் உயிருட்டு கடிதம் அசல் |
| வா.சா.ஆ.9 | 10.01.2025 | பிரதிவாதியின் கடன் கணக்குப்பட்டியல் அலுவலக நகல் |

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.26 16:16:47 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.